**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.206/2024**

**Deposition of P.W.** 4

Name : திரு. முருகேசன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**A2 dispensed A5 to A7 Present. A8 absent.** Petition filed and allowed

<u>முதல் விசாரணை</u>–

நான் திருநெல்வேலி மாவட்ட வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது குழித்துறையில் வசித்து வருகிறேன். நான் மேற்படி பணியில் இருந்த போது கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண். 86/2011 பிரிவுகள் 465, 468, 471, 379இ.த.ச வழக்கில் கைப்பற்றப்பட்ட 3 எலெக்ட்ரிக் டெட்டனேட்டர் மற்றும் 2 மீட்டர் Safety fuse ஆகியவற்றை பெற்று 12.06.2015ம் தேதி காலை 09.30 மணியிலிருந்து 10.00 மணியளவில் களியல் ஐஸ்வர்யா கல்குவாரியில் வைத்து அழித்தேன். அதற்காக சான்றும் வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.2. ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வெடிக்குண்டை செயலிழக்க செய்த அன்று 12.06.2015ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். வெடிபொருட்களை ஐஸ்வர்யா கல்குவாரியில் வைத்து கொடுத்தார்கள். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஐயப்பன் என்பவர் பொருட்களை என்னிடம் ஒப்படைத்தார். அழித்த பிறகு மாதிரி எடுத்து கொடுத்தேன். டெட்டனேட்டரில் இரண்டு வகைகள் உண்டு என்றால் சரிதான். திரியை பயன்படுத்தி உபயோகிக்ககூடிய டெட்டனேட்டரும் உண்டு. நான் அழித்ததாக கூறும் பொருட்கள் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதல்ல என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வெடிபொருட்கள் எங்கு கைப்பற்றப்பட்டது என்று எனக்குத் தெரியாது. எங்கு தயார் செய்யப்பட்டது என்றும் எனக்குத் தெரியாது. யார் தயார் செய்தார், எந்த கம்பெனியில் தயார் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நான் எனது அறிக்கையை போலீசாரிடம் கொடுக்கவில்லை, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். போலீசார் புள்ளி விபரத்திற்காக கைப்பற்றிய வெடிபொருட்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சொன்னதுபோல், வெடிபொருளை செயலிழக்க செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

**6, 7 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.